https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# எல். சி. எம். முறையில் இஸ்லாமிய சொத்துரிமை கணக்குகளை தீர்வு செய்வோம்!

**முனைவர் எஸ். ஏ. உஸ்மான் அலி ஹசனி**
பேராசிரியர்
அரபு மற்றும் இஸ்லாமிய இயல் கல்வியகம்
பி.எஸ். அப்துர் ரஹ்மான் கிரசன்ட் பல்கலைக்கழகம்
சென்னை – 48

**ஆய்வுச் சுருக்கம்**

*இன்று, உலகிலுள்ள உள்ள அனைத்து அரபு மற்றும் இஸ்லாமிய கல்லூரிகளும் சொத்துரிமை பாடத்தின் கணக்கீடுகளை, கணக்கிடும்போது பங்குதாரர்கள் மற்றும் பங்குகளின் எண்ணிக்கைகளுக்கு மத்தியில் காணப்படுகிற தொடர்புகளை கணக்கிட்டு தமாசுல், ததாகுல், தவாஃபுக், தபாயுன் என பெயரிட்டு தீர்வு செய்கிறார்கள். இம்முறை முன்பொருகாலத்தில் சொத்துரிமை கணக்குகளை தீர்வு காண்பதற்கு பின்பற்றப்படும் ஓர் அற்புதமான முறை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. எனினும் இன்றைய சூழ்நிலையில் இந்த மரபு சார்ந்த கணக்கீடு முறைகளில் ஏற்படக்கூடிய சிக்கல்கள், கணக்குகளை தீர்வு செய்வதில் கற்கக்கூடிய மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய அயற்சி போன்ற காரணங்களால் இக் கல்வியை கற்பதில் மாணவர்களுக்கு மத்தியில்*

*ஆர்வமின்மை ஏற்படுகிறது. எனவே இந்தக் கணக்குகளை தற்கால நவீன கல்வி முறைக்கு மாற்றுவது காலத்தின் கட்டாயமாகும். அந்த வகையில் இந்த கணக்குகளை தீர்வு செய்வதற் காக கண்டுபிடிக்கப்பட்ட ஓர் நவீன கல்வி முறையை எல். சி. எம். **(LCM METHOD)** ஆகும். இந்த முறையில் இஸ்லாமிய சொத்துரிமைரிமையின் கணக்குகளை எளிதில் தீர்வு செய்யலாம் என்பதை இந்த ஆய்வின் சாரம்சமாகும்.*

***திறவுச் சொற்கள்:*** *இஸ்லாமிய சொத்துரிமை, எல். சி. எம்., பின்ன மதிப்பு.*

**முன்னுரை**

*இஸ்லாம் ஒரு முழுமையான மார்க்கம். வாழ்வின் எல்லா பிரச்சினைகளுக்கும் தெளிவான தீர்வைக் காட்டும் தீர்வு மிக்க மார்க்கம். அவ் வகையில் இஸ்லாம், நிலையான பொருளாதாரக் கோட்பாட்டுகளின் பின்னணியில். இன்றைய உலகம் சந்திக்கும் பல்வேறு பொருளியல் பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வுகளை முன்வைக்கிறது.*

*நபி (ஸல்) அவர்கள் “ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் ஒரு சோதனை உண்டு, எனது சமுதாயத்தினருக்கு பொருட் செல்வம்தான் பெரும் சோதனையாகும்” (ஸுனன் அத் திர்மிதி, ஹதீஸ் எண்: 2336) என்றார்கள். அந்த பொருட் செல்வத்தின் வழியே நம் அன்றாட வாழ்வில் சந்திக்கும் ஒரு பிரச்சனைதான் சொத்துப் பங்கீடு.*

சொத்துரிமை பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளான். அல்லாஹ் வேறு எந்த சட்டத்தையும் தன் புறத்திலிருந்து இந்தளவிற்கு விளக்கியது கிடையாது. "யார் யாருக்கு எவ்வளவு சொத்துப் பங்குகள்?" என்பதை அல்லாஹ் குர்ஆனில் பட்டியலிட்டு காட்டியுள்ளான். அல்லாஹ்வின் இச்சட்டமானது மிகுந்த நுண்ணறிவோடு செயல்படுத்தப்பட்ட சட்டமாகும்.

பெருமானார்(ஸல்) அவர்கள் இந்த சொத்துரிமை மற்றும் அதன் பங்கீடு தொடர்பான அறிவைக் குறிப்பிடும் போது "இது கல்வியின் பாதி" (ஸுனன் அத் திர்மிதி, ஹதீஸ் எண்: 2091) என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்கள்.

இத்தகைய மேன்மைமிக்க, சிறப்புடைய இக்கல்வியின் தாக்கம் தற்காலத்தில் நாளுக்கு நாள் மறந்தும், மறைந்தும் வருகிறது.

### இந்நிலைமைக்கு காரணம் என்ன?

இச்சட்டக் கல்வியை கற்பதிலும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் முஸ்லிம்களிடம் காணப்படும் பொடுபோக்குத் தன்மை.

பல்வேறு துறைகளிலும் இன்று நவீன முறை பயிற்சி பெருந்தாக்கம் செலுத்துவதால், மரபு சார்ந்த கணக்கீட்டு முறைகளை இச்சட்டங்களுக்கு பயன்படுத்துவதில் ஏற்படும் அயற்சி மற்றும் இயலாமை.

ஷரிஅத் கல்லூரிகள் மற்றும் மதரஸாக்களில் வாரிசுரிமைச் சட்டங்களும் அதன் கணக்கீடுகளும் முறையாக போதிக்கப்பட்டாலும், போதிய பயன்பாடின்றி இருப்பதால் இது தொடர்பான கல்வி மறக்கடிக்கப்படும் ஒரு சமூகச் சூழல்.

எனவே இந்தக் கல்வியின் சிறப்புகளைக் கூறி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

### எல். சி. எம். (LCM METHOD)

### எல்.சி.எம் (LCM) என்றால் என்ன?

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்களை மிகச் சிறிய எண்ணால் வகுப்பது.

வகுக்க பயன்படுத்திய எண்களின் பெருக்கல் தொகையின் மதிப்பு எல்.சி.எம் ஆகும்.

உதாரணம்: 2,3,4,6,8 இந்த எண்களுக்கு எல்.சி.எம் எடுக்கவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 2 | 3 | 4 | 6 | 8 |
| 2 | 1 | 3 | 2 | 3 | 4 |
| 2 | 1 | 3 | 1 | 3 | 2 |
| 3 | 1 | 3 | 1 | 3 | 1 |
| | 1 | 1 | 1 | 1 | 1 |

2 x 2 x 2 x 3 = 24

- மிகச் சிறிய எண்ணால் 2 ஆல் வகுப்பது.
- வகுப்படாத எண்ணை அப்படியே அடுத்த நிலைக்கு (கட்டத்திற்கு) இறக்குவது.
- 2ஆல் வகுக்க முடியாத எண்களை, அடுத்த மிகச்சிறிய எண்ணால் வகுப்பது.
- எப்போது 1, 1, 1 என்ற நிலை அடைகிறதோ, அந்நிலையோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.
- வகுக்க பயன்படுத்திய எண்களின் பெருக்கல் தொகையின் மதிப்பு எல்.சி.எம் ஆகும்.

எல். சி. எம். **(LCM METHOD)** முறையானது சொத்துரிமை கணக்குகளை தீர்வு செய்வ தற்கு ஏற்றமான எளியமுறையாகும். ஏனெனில் குர்ஆனில் சொத்துரிமை பங்குகள் அனைத்தும் தசம எண் அடிப் படையில் உள்ளது. இதில் பின்பற்றப்படும் முறைகள் ஆரம்ப பள்ளிப் பாடங்களில் நாம் பயின்ற கணித முறையாகும் என்பது கவனிக்கத்தக்கது.

### குர்ஆனில் கூறப்பட்டுள்ள மொத்த பங்குகள்

| 1/2 | 1/4 | 1/8 | 1/6 | 1/3 | 2/3 |
|---|---|---|---|---|---|
| இந்த பின்ன எண்களை எல். சி. எம் முறையில் அப்படியே பயன்படுத்த வேண்டும். | | | | | |

இஸ்லாமிய சொத்துரிமையின் அனைத்து அனைத்து கணக்குகளும் இரண்டு சூத்திரங்கள் மூலமாக தீர்வு காணப்பட்டுள்ளது. அவைகள் பின்வருமாறு:

சூத்திரங்கள் (formula)

வாரிசிதாரர்களின் பங்கு = LCM x
ஒவ்வொரு வாரிசின் பின்ன மதிப்பு

| ஒவ்வொரு வாரிசும் பெற்ற சொத்தின் மதிப்பு: | |
|---|---|
| சொத்தின் மொத்த மதிப்பு x | ஒவ்வொரு வாரிசின் பங்கு / ஒவ்வொரு வாரிசின் பங்கின் கூட்டுத் தொகை |

## சொத்தைக்கணக்கீடு செய்யும் முறைகள்

1. மரணித்தவரின் சொத்தை எழுதுதல்.
2. வாரிசுதாரர்களை எழுதுதல்.
3. பின்ன மதிப்புகளை எழுதுதல்.
4. எல்.சி.எம் கண்டுபிடித்தல்.
5. வாரிசுதாரர்களின் பங்குகளை கண்டறிதல்.
6. சொத்துகளை பிரித்தல்.

**உதாரணம்**

ஒருவர் மரணம் அடைகிறார். அவருக்கு தாய், தந்தை, மகன் மற்றும் மனைவி இருக்கிறார்கள். அவர் சொத்து மதிப்பு 15,000 ஒவ்வொரு வாரிசுதாரர்களின் சொத்து எவ்வளவு?

1. முதலில் மரணித்தவரின் சொத்தை எழுதுதல்

**15000**

2. வாரிசுதாரர்களை எழுதுதல்

| 15000 | | | |
|---|---|---|---|
| ↓ | ↓ | ↓ | ↓ |
| மனைவி | மகன் | தந்தை | தாய் |

3. பின்ன மதிப்புகளை எழுதுதல்

வாரிசுதாரர்களின் பின்ன மதிப்புகளை (எல்.சி.எம்) அட்டவணையைப் பயன்படுத்தி எழுத வேண்டும்.

| 15000 | | | |
|---|---|---|---|
| ↓ | ↓ | ↓ | ↓ |
| மனைவி | மகன் | தந்தை | தாய் |
| 1/8 | மீதமான பங்கு | 1/6 | 1/6 |

4. எல். சி. எம் கண்டுபிடித்தல்

⇒ கொடுக்கப்பட்ட பின்ன மதிப்புகளுக்கு எல்.சி.எம் எடுக்க வேண்டும்.

⇒ எடுக்கும்பொழுது பின்ன மதிப்புகளின் கீழ் உள்ள எண்களைப் பயன்படுத்தி எடுக்கவும்.

கொடுக்கப்பட்ட பங்குகள்: 1/8, 1/6, 1/6 (இதற்கு பின்ன மதிப்புகள் என்று சொல்லப்படும்).

எல்.சி.எம் எடுக்க வேண்டிய எண்கள்: 1/8, 1/6, 1/6 (8, 6, 6)

| | | | |
|---|---|---|---|
| 2 | 8 | 6 | 6 |
| 2 | 4 | 3 | 3 |
| 2 | 2 | 3 | 3 |
| 3 | 1 | 3 | 3 |
| | 1 | 1 | 1 |

**LCM: 2 x 2 x 2 x 3 = 24**

5. வாரிசுதாரர்களின் பங்குகளை கண்டறிதல்

இந்த எல்.சி.எம்-ஐ பயன்படுத்தி ஒவ்வொரு வாரிசுதாரர்களுக்கு எவ்வளவு பங்கு கிடைக்கும் என்பதை பார்க்க வேண்டும்.

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அதற்கான வழி முறை (Formula)

| |
|---|
| வாரிசிதாரர்களின் பங்கு = LCM x ஒவ்வொரு வாரிசின் பின்ன மதிப்பு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தாய் | 24 | X | 1/6 | = | 4 | பங்கு |
| தந்தை | 24 | X | 1/6 | = | 4 | பங்கு |
| மனைவி | 24 | X | 1/8 | = | 3 | பங்கு |
| மகன் | மீதமான பங்கு | | | | | |

மீதமான பங்கு ?

அதற்கான வழி முறை (Formula)

எல்.சி.எம் – வாரிசுதாரர்கள் பெற்ற பங்குகளின் கூட்டுத் தொகை

| 15000 | | | |
|---|---|---|---|
| ↓ | ↓ | ↓ | ↓ |
| மனைவி | மகன் | தந்தை | தாய் |
| 1/8 | மீதமான பங்கு | 1/6 | 1/6 |
| 3 | 13 | 4 | 4 |

| எல்.சி.எம் | வாரிசுதாரர்கள் பெற்ற பங்குகளின் கூட்டுத் தொகை | |
|---|---|---|
| 24 | தாய் | 4 |
| | தந்தை | 4 |
| | மனைவி | 3 |
| | கூட்டுத் தொகை | 11 |

மீதமான பங்கு = 24 — 11 = 13

தற்போது வாரிசுதாரர்கள் பெற்ற பங்குகளின் கூட்டுத் தொகை:

| | |
|---|---|
| தாய் | 4 |
| தந்தை | 4 |
| மகன் | 13 |
| மனைவி | 3 |
| கூட்டுத் தொகை | 24 |

6. சொத்துகளைப் பிரித்தல்:

பங்குகளை பிரித்ததற்கு பிறகு அந்த பங்குகளின் அடிப்படையில் சொத்துகளை பிரிக்க வேண்டும் அதற்கான முறை:

அதற்கான வழி முறை (Formula)

ஒவ்வொரு வாரிசும் பெற்ற சொத்தின் மதிப்பு:

| அதற்கான வழி முறை (Formula) ஒவ்வொரு வாரிசும் பெற்ற சொத்தின் மதிப்பு: | |
|---|---|
| சொத்தின் மொத்த மதிப்பு X | ஒவ்வொரு வாரிசின் பங்கு |
| | ஒவ்வொரு வாரிசின் பங்கின் கூட்டுத் தொகை |

இவ்வாறு, இஸ்லாமிய சொத்துரிமையின் எல்லா கணக்குகளையும் மேற்கூறப்பட்ட இரண்டு சூத்திரங்களை (formula) பயன்படுத்தி தீர்வு செய்யலாம் என்பது சிறப்புக்குரிய அம்சமாகும்.

## முடிவுரை

எல். சி. எம் போன்ற எளிய வடிவில் நம்முடைய அறிஞர்கள் முதல் பாமரர் கள் வரை தத்தமது சொத்து கணக்கீடு களை நேர்மையாக, துல்லியமாக எவ்வித குழப்பமின்றி பிரித்து கொள்ள முடியும். இது போன்ற கணக்கு முறைகளின் மூலம் இஸ்லாமிய சொத்துரிமை கணக்கு களை எளிதாக்கி, அதை பிறருக்கும் கொண்டு சேர்த்து, அது "உலகில் பரவலாக்க வேண்டும்" என்ற நம்முடைய இலக்கை நாம் எட்டுவதற்கு இறைவன் பேரருள் புரிய வேண்டும்!.

## துணை நூற்பட்டியல்

1. குர்ஆன்
2. ஸஹீஹுல் புகாரி
3. தமிழ்நாடு அரசு கணிதவியல் பாடப் புத்தகம்
4. ஸுனன் அத் திர்மிதி
5. முஸ்னத் அஹ்மத்